பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை 19.03.2024 கதிர் 133

# அதிகார மாற்றம் இலகுவாக இருக்கப் போவதேயில்லை

## ஹரிணி அமரசூரிய லண்டனில் தெரிவிப்பு

அதிகாரமாற்றம் இலகுவானதாக இருக்கப்போவதில்லை என தெரிவித்துள்ள தேசிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய மாற்றங்கள் நிகழ்வதை உயர்குழாமை சேர்ந்த சிறிய குழுவினர் தடுத்துவருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

லண்டன்பெண்கள்மாநாட்டில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ள அவர், இலங்கையில் கடந்த 76 வருடங்களாக இடம்பெற்ற விடயங்களிற்கு உயர்குழாமை சேர்ந்த சிறிய குழுவினரே காரணம் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

பஸில் ராஜபக்ச நாட்டுக்குத் திரும்பியதில் இருந்து ரணில் - மொட்டு உறவு சுமுகமாக இல்லை என்று தெரிகின்றது. எப்போது வேண்டுமானாலும் இரு தரப்புகளுக்கும் இடையில் நிரந்தரப் பிளவு ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல் நெருங்க நெருங்க ராஜபக்சக்கள் தங்களதும் கட்சியினதும் எதிர் காலத்தைப் பாதுகாப்பது தொடர்பில் அக்கறைப்படத்தொடங்கிவிட்டார்கள். அதற்கு அவர்கள் வழக்கமான தேசப்பற்று ஆயுதத்தைக் கையில் எடுக்கவும் தயங்கவில்லை. ரணிலுக்கோ என்ன செய்வதென்று தெரியாத நிலை. அவருடன் கூட, அவரை வெல்ல வைக்கக்கூடிய யாரும் இல்லை. ☞ 2

## ரூ. 25 லட்சம் பெறுமதியான
## போதைப்பொருள் சிக்கியது சந்தேகநபரும் மாட்டினார்

ரூபாய் 25 லட்சம் பெறுமதியான போதைப் பொருள் ஜாஎலவில் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இதனுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் உணவகம் ஒன்றின் உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்கா பகுதிகளுக்கு போதைப் பொருள் விநியோகிப்பவர் இந்தச் ☞ 2

## பொதுத் தேர்தல் நடந்தாலும்கூட
# ஜனாதிபதி தேர்தலை பிற்போடவே முடியாது
## தேர்தல் ஆணையாளர் நாயகம் உறுதி

பொதுத் தேர்தலை முன்கூட்டியே நடாத்தினால்கூட ஆளும்தரப்பால் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட முடியாது எனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறீரத்நாயக்க தெரிவித்தா

பொதுத் தேர்தலே முதலில் நடைபெற வேண்டும் எனத் தனது கட்சி விரும்புகின்றது என்று பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளமை குறித்த 'ஐலண்ட்' நாளிதழின் கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்கமுடியும். அதன்பின்னர் நாடாளுமன்றத்திற்கான புதிய தேர்தலை அவர் நடத்தலாம். ஆனால்ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில்இடம்பெறுவதை உறுதிசெய்யவேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித்தேர்தலிற்கு முன்பாகநாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது மிகவும் சவாலான விடயமாகக் காணப்படும் எனவும் தெரிவித்துள்ள சமன் சிறீரட்நாயக்க, எவ்வாறான நெருக்கடிகள் சவால்கள் காணப்பட்டாலும்ஜனாதிபதிதேர்தலை பிற்போடமுடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் வாரங்களில்ஜனாதிபதிநாடாளுமன்றத்தை கலைத்தால் தேர்தலிற்கான நிதியை எவ்வாறு பெறுவதற்கு தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது என்ற கேள்விக்கு ☞ 2

# ஆட்சியில் இல்லாமலேயே மக்கள் சேவையாற்றும் ஒரே கட்சி தே.ம.ச.
## எதிர்க் கட்சித் தலைவர் பெருமிதம்

எல்லையற்ற அதிகாரப்பேராசைகொண்டபல் வேறு தரப்பினர் பெரும் செல்வத்தைசெலவழித்து அதிகாரத்தைப் பெற முயற்சிக்கும் நேரத்தில் இலங்கையின் 76 வருட ஜனநாயக வரலாற்றில் அதிகாரம்இன்றிநாட்டிற்கு சேவையாற்றியஒரேயொரு எதிர்க்கட்சிஐக்கியமக்கள் சக்தி (தேமச) என வரலாறு படைத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் இன்னும் பல பணிகளைச் செய்ய முடியும் என்று நம்புகிறது, ஆனால் அதிகாரத்திற்குவருவதற்கு முழுநிதிபலத்தைப்பயன்படுத்தாமல், ஸ்மார்ட் குடிமக்கள், ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற தூய நோக்கத்துடன்தமதுகட்சி செயல்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

"வாக்களிக்கும்போது இரு முறை யோசித்து வாக்களியுங்கள். கூறுவதெற்கெல்லாம் கைதட்டாதீர்கள். இவ்வாறு யோசித்துப் ☞ 2

## நாட்டை பின்னோக்கி இழுக்க முயல்வோர் மீது சட்டம் பாயும்
### ராஜாங்க அமைச்சர் வக்கும்புர எச்சரிக்கை

நாட்டைபின்னோக்கி இழுத்துச் செல்ல முயல்பவர்களுக்கு எதிராக தராதரம் பார்க்காமல் சட்டத்தைச்செயல்படுத்துவோம் என்றுமாகாணசபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ☞ 2

## ரூ. 100 மில். டொலர் கடன் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி
### நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

பொருளாதார சிக்கலினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்காக தேசிய கடன் பிணை நிறுவனத்தினை நிறுவுதல் உட்படசகலநடவடிக்கைளுக்காகவும் 100 மில்லியன் டொலர் கடனுதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்திவங்கிஅனுமதியளித்துள்ளதாக நிதி இராஜாங்க ☞ 9

## நவீனமுறை இளம் விவசாயிகளை சந்தித்துப் பாராட்டினார் ஜனாதிபதி

அரை ஏக்கர் மிளகாய் பயிரிட்டு ஒன்பது மாதங்களில்12மில்லியன் ரூபா வருமானம் ஈட்டிய அநுராதபுரம், திரப்பனை, புளியங்குளம்கிராமத்தைச் சேர்ந்த இளம் விவசாயி பந்துலமுனசிங்கமற்றும் ஒரு ஏக்கரில் தர்பூசணி பயிரிட்டதன் மூலம் இரண்டு மாதங்களில் 4 மில்லியன் ரூபாய் வருமானம் பெற்ற கல்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் விவசாயி புத்திகசுதர்ஷனஆகியோர் ஜனாதிபதிஅலுவலகத்தில் நேற்றுபிற்பகல்ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவைச் சந்தித்தனர்.

இந்த இளம் விவசாயிகள் தமது அறுவடையின் ஒரு பகுதியுடன் ஜனாதிபதியைச் சந்தித்ததுடன், வளமான விளைச்சலைப் பெறுவதற்குவழிகாட்டியஆளும் தரப்பின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்தனர்.

விவசாயஅமைச்சின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தினூடாக அறிமுகப்படுத்தப்பட்டஅதிக அடர்வு பயிர்ச்செய்கை முறையைப்பயன்படுத்தி பந்துல முனசிங்க அரை ஏக்கரில் மிளகாய் பயிரிட்டார்.

பாரம்பரிய முறையில் அரை ஏக்கரில் பயிரிடக்கூடிய மிளகாய் செடிகள் சுமார் 6000, ஆனால்இந்தஅதிகஅடர்வு பயிர்ச்செய்கை ☞ 2

# இந்தியத் தேர்தலின் பின்னரே இனி எட்கா ஒப்பந்தம் கையெழுத்திடப்படும்
## உதய கம்பன்பில எதிர்வுகூறல்

இந்தியாவின் நாடாளுமன்ற மக்களவைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுவிட்ட நிலையில் அது முடிந்த பின்னர்தான் இனி 'எட்கா' எனப்படும் இலங்கையுடனானபொருளாதார அபிவிருத்தி ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும், அதுதான் ஆட்சியாளர்களின் உத்தேசம் என்று பிவிதுரு ஹெல உறுமயகட்சித்தலைவர், நாடாளுமன்றஉறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுருஹெலஉறுமய கட்சி அலுவலகத்தில் நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிதபோது அவர் இதனைக்கூறினார்.அவர் மேலும்தெரிவித்ததாவது,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எட்கா ஒப்பந்தம் இந்த மாதம் கைச்சாத்திடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அது பிற்போடப்பட்டுள்ளது. இந்திய பொதுத்தேர்தல் நிறைவுபெற்றதன்பின்னர் 'எட்கா'ஒப்பந்தத்தை ☞ 2

# அரசியல் கட்சிகளின் மீது மக்கள் நம்பிக்கையிழப்பு
## ஆய்வில் தகவல்

அரசியல் கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்று மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் மேற்கொண்ட ஆய்வின்மூலம்தெரியவந்துள்ளது.

மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் மேற்கொண்டஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் குறித்தகருத்துக்கணிப்பில் கலந்துகொண்டவர்களில் பத்தில் ஒருவர் ஏதேச்சதிகாரம்குறித்துவிருப்பம் வெளியிட்டுள்ளனர்.

ஏனையவகைஆட்சி முறைகளைவிட ☞ 2

# பதவியில் இருந்தவர்களிலேயே மோசமானவர் இன்றைய சபாநாயகர் மகிந்த யாப்பாவேதான்
## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடும் சாடல்

இலங்கையில் பதவியிலிருந்த25சபாநாயகர்களில் தற்போது பதவியில் உள்ள மகிந்தயாப்பாஅபேயவர்தனவே மிக மோசமான சபாநாயகர். மனித உரிமைகளைப்பாதுகாப்பதற்காகவே அவருக்கு எதிராக எதிர்க் கட்சிகள் நம்பிக்கையில்லாப்பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்துள்ளன.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர்ஜ.எல்.பீரிஸ் தெரிவித்தார். கொழும்பில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எந்தவொருபிரேரணையும் அரசமைப்புடன் ☞ 9

## இனி இது .....

மொட்டுக் கட்சியின் இளம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்கள் சிலருமே அவரோடு இருக்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு உருப்படியாக எந்தத் தேர்தலையும் வெல்ல முடியாதநிலையில்மொட்டைத்தூக்கி எறியவும் முடியாமல் மொட்டோடு முழுமையாக இணங்கிப் போகவும் முடியாமல் சித்திரவதைப்படுகிறார்.

ரணிலை கழற்றிவிட்டுவிட்டு எதிர்த் தரப்பில் போய் அமர்ந்து கொள்வதே தமது எதிர்காலத்திற்குச் சிறந்ததுஎன்பதுமொட்டுக்கட்சிக்குள் நீண்டநாள்களாகவே இருந்தவரும் கருத்து. நாமல், சாகர போன்ற தலைவர்கள் ரணிலையும் அவரால் பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் பாவங்களையும் தூக்கிச் சுமக்க வேண்டாம் என்று பார்க்கிறார்கள். ரணிலைக் கழற்றிவிட்டால் அவர் வேறு வழியில்லாம் சஜித்துடன் சேர்ந்தேயாகவேண்டும் அப்படிப்பட்ட நிலையில் வழக்கம்போல ஐ.தே.கவைச் சாடியே தங்கள் அரசியலை முன்கொண்டு சென்றுவிடலாம் என்பது அவர்களின் கணிப்பு.

ஆனால்,இரண்டுநகர்வுகளுமே சாத்தியமாக இல்லை. முதலில் ரணிலைகழற்றிவிடமுடியவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் ரணில் தோற்றால் அவர் தானாகவே கழன்றுகொள்வார் என்றபோதும், அடுத்து வரும் ஜனாதிபதி என்ன செய்வார் என்பதைச் சொல்ல -முடியாது. பொருளாதாரச் சீரழிவுக்குக் காரணமானவர்கள் என்று ராஜபக்சக்களைத் தூக்கி உள்ளே வைக்கவும்கூடும். அப்படிப்பட்டதொரு நிலை வந்தால் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டுக் கட்சியின் உறுப்பினர்களில் பலரும் ஆளும்தரப்புப்பக்கம்எந்தப்பயமும் இன்றிப் பாய்ந்துவிடுவார்கள். அது தமது அரசியலுக்கு நல்லதல்ல என்பது ராஜபக்சக்களின் கருத்து. நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்திவிட்டால், இப்போது தமக்கிருக்கும் கொஞ்ச நஞ்ச ஆதரவை வைத்துக்கொண்டு கணிசமான நாடாளுமன்ற ஆசனங்களை வென்றுவிடுவது தமக்கான பலம் என்று அவர்கள் கருதுகின்றார்கள். அத்தோடு ரணிலையும் கழற்றிவிட்டு எதிர்த் தரப்பில் இருந்துவிடலாம் என்று கணிக்கிறார்கள்.

ரணிலுக்கோ, தனது கட்சியும் சரி இப்போது நிமல் லன்ஸா அமைத்துவரும் தனக்கான கூட்டணியோ சரி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியைத் தேடித் தரப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரியும். அதனால் இந்தப் பொருளாதார நெருக்கடியைச் சமாளித்ததில் மக்கள் மத்தியில் தனக்கு இருக்கக் கூடிய செல்வாக்கை (அது இருக்கிறதா இல்லையா என்பது வேறு விடயம்) வைத்து ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதுதான் வெற்றிக்கான கொஞ்ச நஞ்ச வாய்ப்பையாவது தரும் என்பது கணிப்பு. இதனால், ஜனாதிபதித் தேர்தல் முதலில் என்பதுதான் அவரது தெரிவு.

இருப்பினும் ரணிலும் சரி மொட்டும் சரி இதுதான் இறுதியான முடிவுஎன்கிறஎந்தவொருமுடிவுக்கும் இதுவரையில் வரவில்லை. வாய்ப்புக்களைத்தான் அவர்கள் ஆராய்கிறார்கள். தமக்குச் தமக்குச் சாதகமான வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளமுடியுமாஎன்று பார்க்கிறார்கள். நேற்று நாமல் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்து அதனை உறுதிப்படுத்தியது. ”கட்சிகளுக்குள் தேர்தல் தொடர்பில் இப்போது பல கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் இறுதித் தீர்மானத்தை கட்சிகளே எடுக்கும்'' என்றார். மொட்டுக் கட்சிக்குள் தனிப்பட்ட கருத்துக்கள் பல இருப்பதை ஏற்றுக்கொண்ட அவர், ஆனாலும் இறுதி முடிவு என்று வருகின்றபோது அனைவரும் ஒன்றிணைந்துதான் எடுப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

எனவே தேர்தல் நெருங்க நெருங்க இன்னும் பல அரசியல் குழப்பங்களை ஆளும் தரப்புக்குள் எதிர்பார்க்கலாம் என்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அதிகார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் குற்றஞ்சாட்டினார்.

இந்தச் சிறிய குழுவினர் இலகுவில் அதிகாரங்களை கைவிடமாட்டார்கள் அந்தக் குழுவினரைவிடத் தாங்கள் பலம் வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதை மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர் எனவும் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

மாற்றங்கள் இலகுவாக நிகழப்போவதில்லை அதிகாரத்தில் உள்ள சிறிய குழுவினர் மாற்றங்கள் நிகழ்வதை தடுப்பதற்காக அனைத்தையும் செய்வார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் நாட்டு மக்கள் அவர்களை விட வலுவானவர்கள் இதற்கு முன்னர் நாங்கள் எங்கள் பலத்தை உணரவில்லை, ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழுவாக மாறுவதன் மூலம் நாங்கள் அவர்களைவிட வலுவானவர்களாக திகழுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் கடந்த 76 வருடங்களாக இந்த நாட்டை அழித்துவிட்டார்கள் இந்தயுகத்தை முடித்துவைப்பதுஉங்களுக்கு உள்ள கடமை உங்களால் அந்த மாற்றத்தை செய்ய முடியும் நீங்கள் அந்த மாற்றத்தின் ஒரு பகுதியாகவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் 44 வயதுடையவர். இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 2 கிலோகிராம் கேரள கஞ்சா, 50 கிராம் ஐஸ் போதைப்பொருள், மைக்ரோ இலத்திரனியல் தராசு மற்றும் போதைப்பொருள் விற்பனை மூலம் பெறப்பட்ட பணம் என்பன கைப்பற்றப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் கட்டுநாயக்க பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான இருவர் கைதான சந்தேகநபர் பற்றிப் பொலிஸாருக்கு தகவல்கள் வழங்கினர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். .

சந்தேக நபர் வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள போதைப்பொருள் கடத்தல்காரரான 'சுங்கா'வின் சகா என விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைச்சாத்திட ஆட்சியாளர்கள் உத்தேசித்துள்ளனர்.

வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படும்போது எவ்விதமான முறையான வழிமுறைகளும் தற்போது பின்பற்றப்படுவதில்லை.ஆகவே எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் நான்கு பிரதான நிபந்தனைகளை ஆட்சியாளர்கள் நிறைவேற்றவேண்டும்.

முதலாவது இலங்கைக்கான வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்த கொள்கைகள் வகுக்கப்படவேண்டும்.2016 ஆம் ஆண்டு சிங்கப்பூர் நாட்டுடன் சுதந்திரவர்த்தகஒப்பந்தம்கைச்சாத்திடும் போதே இதனைக் குறிப்பிட்டோம். ஆனால் ஆட்சியாளர்கள் அதைக் கவனத்திற்கொள்ளவில்லை.குறித்த ஒரு ஒப்பந்தத்தில் இலங்கைக்கு அனுகூலம் எது, பிரதிகூலம் எது என்பதை அடையாளப்படுத்த ஒரு வழிமுறை வேண்டும்.அவ்வாறான வழிமுறைகள் ஏதும் இல்லாமல் வர்த்தகஒப்பந்தங்களுக்குச்சென்றால் எதிர்மறையானதாக்கங்கள்மாத்திரமே ஏற்படும்.

இரண்டாவது,வெளிநாட்டுவர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு உரிய சட்டங்கள் நடைமுறையில் இல்லை ஆகவே வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்களுக்காக நடைமுறைக்கு சாத்தியமான வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

மூன்றாவது, ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுதற்கு ஒருமாதத்துக்கு முன்னர் ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் பகிரங்கப்படுத்தப்பட்டு, நாடாளுமன்றத்தில் இருநாள் விவாதம் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் ஒப்பந்தத்தின் உண்மைத் தன்மை வெளிப்படும்.

1998 ஆம் ஆண்டு இந்தியாவுடன் முதலாவது சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.அதனை தொடர்ந்து சிங்கப்பூர், பாக்கிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்களினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பயன் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட நான்கு நிபந்தனைகளையும் பின்பற்றாமல் எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் அது இலங்கைக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட அரசாங்கத்துக்கு உரிமையில்லை என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் - என்றார்.

## நாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட ஆளும் தரப்பு வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நாங்கள் ஏற்கனவே நிறைவேற்றியுள்ளோம். 16,000 மில்லியன் செலவில் 162 பாலங்கள் நிர்மாணிக்கப்படும் என்று கூறினோம். அந்தப் பாலங்களில் ஒரு பகுதியை ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுமக்களிடம் ஒப்படைக்கத் தயாராக உள்ளோம். இதன்படி 162 பாலங்களும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு முன்னர் மக்களிடம் கையளிக்கப்படும்.

அத்துடன், சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்ட 1000 மில்லியன் ரூபா திட்டமும் ஓகஸ்ட் மாத இறுதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

மேலும், 29,000 பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் பெரும்பாலானோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும். இன்னும் 2600 உத்தியோகத்தர்கள் எஞ்சியுள்ளனர். அவர்களை வெற்றிடமாக உள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளோம்.

இந்த ஆண்டில் ஓய்வுபெறுபவர்களுக்குப் பதிலாக பி.எல். 1- - 2 பிரிவுகளுக்கு மேலதிகமாக உள்ள ஊழியர்களைப் பணியமர்த்த அனுமதி அளித்துள்ளோம். மேலும் அனைத்து அமைச்சுக்களின் கீழும் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிகளை விரைவில் நிறைவுசெய்ய எதிர்பார்க்கின்றோம். நாடு நெருக்கடியில் இருந்து மீண்டு வருகிறது. இது அனைத்துத் துறைகளிலும் எடுத்துக் காட்டப்படுகிறது.

நாட்டை மீண்டும் கடந்த காலங்களில் இருந்த நிலைக்கு பின்னோக்கிக் கொண்டுசெல்ல சிலர் முயற்சிக்கின்றனர். இப்படி இடையூறு செய்பவர்களுக்கு எதிராக தரா தரம் பாராமல் சட்டத்தை செயல்படுத்துவோம் என்றார்.

## நவீனமுறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் பயிரிடக்கூடிய மிளகாய் செடிகளின் எண்ணிக்கை 13,000. இந்தப் புதிய முறையில் பல மடங்கு விளைச்சலை அதிகரிக்க முடியும் என்று விவசாயி பந்துல முனசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் திரப்பனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்குளம் பிரதேசத்தில் வசிக்கும் புத்திக சுதர்சன 39 வயதுடையவர். இரண்டு பிள்ளைகளின் தந்தை.

நவீன தொழில்நுட்பத்தில் ஒரு ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட தர்பூசணி சாகுபடியில் அதிக விளைச்சல் பெற முடிந்ததாகவும், ஒரு கிலோ தர்பூசணியை சுமார் நூற்றி எண்பது ரூபாய்க்கு விற்பனை செய்ததன் மூலம் இந்த அதிக வருமானத்தைப் பெற முடிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் விவசாயத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆளும் தரப்பின் வேலைத்திட்டத்தில் இவ்வாறான இளம் விவசாயிகள் முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்களின் செயலைப் பாராட்டி அவர்களுக்கு நினைவுப்பரிசுகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவும் கலந்து கொண்டார்.

## ஆட்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்காது வெறும் வாய்ச் சொல் வீரர்களிடம் நாட்டை ஒப்படைத்ததாலயே நாடு இன்று வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது” என்றும் அவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 127 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மாத்தறை, அக்குரஸ்ஸ, மாலிம்பட, ஹொரகொட மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு மார்ச் 17 இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கல்லூரியின் நடனம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான ஆடைகளுக்கென ஒரு இலட்சம் ரூபா நிதியையும் நன்கொடையாக எதிர்க்கட்சித் தலைவரால் வழங்கப்பட்டது.

இப்பாடசாலை மாணவர்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இதன்போது அதிபர் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் தெரிவித்தபோது, அது தொடர்பான செலவு மதிப்பீடுகளை தயாரித்து சமர்ப்பிக்குமாறும், அதன் பிறகு அதற்கான நிதி உதவி வழங்கப்பட்டு குடிதண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து தருவாகவும் சஜித் வாக்குறுதியளித்தார்.

இந்நாட்டில் வசதியானோருக்கான கல்வி மற்றும் வசதியற்றோருக்கான கல்வி எனக் கல்வி 2 பகுதிகளாக ஏற்றத்தாழ்வை சந்தித்துள்ளது. சில கிராமப்புற பாடசாலைகளில் சுத்தமான குடிதண்ணீர் வசதிகளைக்கூட ஏற்படுத்திக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. தலைநகர் உயர் பாடசாலைகளில் இவ்வாறான பிரச்சினைகள் இல்லையென்றாலும் கிராமப்புற பாடசாலைகளில் இவ்வாறான பிரச்சினைகள் கூட காணப்படுகின்றன.

பாடசாலை மாணவர்கள் தாகத்தால் அவதிப்பட்டால் அதுவும் மனித உரிமை மீறலாகும். பாடசாலை கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இந்த வசதிகள் வழங்கப்படாவிட்டால் அதுவும் மனித உரிமை மீறலாகும்.

சிங்களம் மட்டும், தமிழ் மட்டும் என்று சொல்லி இலங்கையை முதலிடத்திற்கு கொண்டுவர முடியாது. இவ்வாறு கோஷம் எழுப்புபவர்கள் காட்போட் தேசபற்றாளர்கள். சிங்களம் மட்டும் தமிழ் மட்டும் என கூறிக் கொண்டு குறுகிய சிந்தனைகளில் இருந்துகொண்டு உலகை எம்மால் வெற்றி கொள்ள முடியாது.

மக்கள் மனங்களில் ஊசலாட்டங்களை ஏற்படுத்தி, தவறான தூண்டுதல்களை ஏற்படுத்தி, தேசிய ஒற்றுமையைச் சீர்குலைத்து, நாட்டை சீரழிக்கும் போலி தேசபற்றாளர்களை மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். எமது 41 இலட்சம் பாடசாலை மாணவர்கள் ஆங்கில மொழியில் சரளமாகத் தேர்ச்சி பெற்று புதிய தொழில்நுட்பத்துடன் உலகின் முதல் இடத்திற்குச் செல்வதற்கு உண்மையான தேசப்பற்று அவசியமான வழியாகும், இவ்வாறான முற்போக்கு நீதியான பயணங்களுக்குத் தடைகளை ஏற்படுத்துபவர்களே போலியான தேசப்பற்றாளர்கள்.

மலட்டுக் கொத்து, மலட்டு அறுவை சிகிச்சைகள் போன்ற பொய்யான விடயங்களை கூறி,மக்கள் ஏமாற்றி திருடர்களுக்கு மக்கள் ஆணை சென்றதாலையே நாடு வங்குரோத்தாகி, 220 இலட்சம் பேரும் நிர்க்கதியான சூழலை சந்தித்து இருக்கும் நேரத்தில், ஐக்கிய மக்கள் சக்தி தற்காலிக பொறுப்பாளர்களாக நாட்டை கட்டியெழுப்பும் பயணத்திற்கு இயலுமான ஒத்துழைப்பை நல்கத் தயாராக உள்ளது.

இதன் ஓர் அங்கமாகவே இந்த பிரபஞ்சம் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இனம், மதம், சாதி, வர்க்கம், கட்சி பேதமின்றி அனைவரையும் இதில் ஒன்றிணையுமாறும், 41 இலட்சம் பாடசாலை மாணவர்களின் முன்னேற்றத்திற்கு எம்மாலான கூடிய பக்க பலத்தை வழங்க வேண்டுமென்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக் காட்டினார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறான நிலைமையேற்பட்டால் ஜனாதிபதி ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து நிதியை ஒதுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். 2024 வரவு செலவு திட்டத்தின் மூலம் ஜனாதிபதி தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசியல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக ஆட்சி முறையை அதிகளவானவர்கள் விரும்புகின்ற போதிலும் சமீபத்தைய ஆய்வின் மூலம் பத்தில் ஒரு இலங்கையர் சில சூழ்நிலைகளில் ஜனநாயக முறையைவிட சர்வாதிகார ஆட்சிமுறை பொருத்தமானது என கருதுகின்றமை தெரியவந்துள்ளது.

2018 இல் மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்தில் அரசமைப்பு நெருக்கடி உருவானவேளை இதுபோன்றதொரு மனோநிலை காணப்பட்டது என மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்திற்கான வலுவான ஆதரவு உள்ளபோதிலும் ஜனநாயக ஆட்சி மீதான விரக்தி அதிகரிக்கும்போது எதேச்சதிகார ஆட்சிக்கான ஆதரவு புத்துயிர் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை நாடாளுமன்றம் மற்றும் அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை முன்னரைப்போதையும்விட குறைவாக காணப்படுகின்றமையும் இந்த கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

கருத்துக்கணிப்பில் கலந்துகொண்டவர்களி;ல் 22 வீதமானவர்களே நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்-19 வீதமானவர்களே அரசியல் கட்சிகள் மீது நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஜனநாயக கட்டமைப்புகளின் நம்பிக்கை தன்மைக்கு அவை குறித்த மக்களின் நம்பிக்கை மிகவும் முக்கியமானது என தெரிவித்துள்ள ஆய்வு, சட்டமியற்றும் அமைப்புகள் மற்றும் சட்டங்களை உருவாக்குபவர்களை உருவாக்கும்

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# வெடுக்குநாறிமலை சிவராத்திரி வழிபாட்டின்போது பொலிஸாரின் செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கவை

## பிரித்தானிய தமிழர் பேரவை காட்டம்

சிறிலங்கா அரசும் அதன் இராணுவ, பொலீஸ் நிர்வாகங்களும் தொடர்ச்சியாக தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டு வரும் கைதுகள், நில அபகரிப்பு மற்றும் பொது மக்களின் அன்றாட செயற்பாடு களில் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள், இடையூறுகள் தொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவை கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

வெடுக்குநாறிமலை ஆலய சிவராத்திரி வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட ஆலய பூசகரின் கைதும் பக்தர்களின் கைதும் கண்டனத்துக்கு உரியதுடன் இவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

மேலும் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் விக்கிரகங்கள் மீளக் கையளிக்கப்பட்டு அவற்றை அபகரித்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வேண்டிய அரசநிர்வாகம், அதற்கு மாறாக பல்லாண்டு காலமாக வழிபட்டு வரும் தமிழ் மக்களின் மீது அரச படைகளை ஏவி விட்டு அச்சுறுத்த முனைகின்றது.

அடக்குமுறைகள்தான் எம் மக்களை போராட நிர்ப்பந்தித்தது என்ற யதார்த்தத்தை சிங்கள தேசம் புறக்கணித்தபடியால்தான் இன்று அது கையறு நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளது.

இவ்வாறான கைதுகளும், தமிழர்களின் வழிபாட்டு உரிமைகளைத் தடுத்து வழிபாட்டு தளங்களை அபகரிப்பதும், தொல்லியல் திணைக்களம் போன்ற அரச இயந்திரத்தின் அங்கங்களை ஏவிவிடுவதும், தமிழ் மக்களின் பாரம்பரிய நிலத்தைச் சிதைத்து துண்டம் துண்டமாக்கி அவற்றை சிங்கள பௌத்த அடையாளங்களால் உருமாற்றம் செய்து தொடர்ச்சியான நிலப் பரப்பைக் கொண்ட தமிழர் தாயகம் என்ற எம் உரிமைக் கோரிக் கையை சிதைப்பது சிறிலங்கா அரசின் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பின் திட்டமிட்ட மூலோபாயம் ஆகும்.

நல்லிணக்கம் பற்றிக் கூறிக் கொள்ளும் ரணில் அரசு, இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இனங்களுக்கு இடையிலான முரண்பாடு களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வது இலங்கைத் தீவில் நிலையான அமைதி, ஸ்திரத்தன்மை, வளர்ச்சி ஒரு போதும் சாத்தியப்படாது என்பதைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சர்வதேச தளத்தில் பன்முனைப்பட்ட முடிவெடுக்கும் சக்திகளிடம் எடுத்துரைக்க வேண்டும் என்பதைத் தோழமையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரித்தானிய தமிழர் பேரவை கடந்த பல வருடங்களாகத் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் இவ்வாறான இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரல் தொடர்பில் சர்வதேச சமூகத்திடமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையிலும் எடுத்துரைத்து வருவது போன்று இப்பொழுது இடம்பெறும் ஐ.நா.மனித உரிமைக்கழக மார்ச் மாதக் கூட்டத் தொடரிலும் தகைமை வாய்ந்த முடிவெடுக்கும் மையங்களுக்கு ஆதாரபூர்வமான தகவல்கள் பதிவு செய்யப்படும்.

இவ்வாறாகத் தொடரும் நில ஆக்கிரமிப்பு, சமூக பொருளாதார அடிப்படைகளில் தமிழர் தேசத்தைச் சிதைத்து பலவீனப்படுத்தல், தங்குநிலையில் வைத்திருத்தல், தாயகத்தில் தமிழ் மக்கள் வாழ முடியாத சூழ்நிலைகளை உருவாக்கி அவர்களை மண்ணிலிருந்து வெளியேற்றுவது, தமிழர் அரசியல் பிரதிநிதித்துவத்தை சிதைப்பதும் செயலிழக்கச் செய்வதுமான செயற்பாடுகளை இடைநிறுத்தி தம்மை தாமே நிர்வகிக்கக் கூடிய இடைக்கால நிர்வாகப் பொறிமுறை ஒன்றை உடனடியாக உருவாக்குமாறு இந்தியா உட்பட சர்வதேச தளப்பரப்பில் முக்கிய உறுப்பு நாடுகளிடம் எமது இக் கோரிக்கையை முன்வைக்கின்றோம். - என்றுள்ளது.

(05)

# 'வாழ்வு சுமந்த வலி' நூல் வெளியீட்டு விழா



(அபு அலா)

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கரவை. மு.தயாளனின் 'வாழ்வு சுமந்த வலி' நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனகதீபகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக மேனாள் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக எழுத்தாளர் நிலாவெளியூர் கெஜதர்மா, ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன், வைத்தியர் சி.ஹயக்கிரிவன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

நூலின் முதற்பிரதியை வைத்தியர் சி.ஹயக்கிரிவன் பெற்றுக்கொண்டார்.

இவ்விழாவில் எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய வட்ட ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நூலின் பிரதிகளைப் பெற்றுக் கொண் டனர்.(05)

# திருநெல்வேலி சைவ சிறுவருக்கு கணிதபாட நூல்கள் அன்பளிப்பு







திருநெல்வேலி சைவ சிறுவர் இல்லத்தில் உள்ள எல்லா சிறார்களுக்கும் சனிக்கிழமை தரம் 6-11 வரையான கணிதபாட பயிற்சி நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

கனடாவில்பிறந்து வளர்ந்து கனடாவில்வாழும் பேரின்பநாதன் இராகுலன், தனது தந்தையின் (அமரர் கந்தையா பேரின்பநாதன்) நினைவாக இல்லத்தில் தரம் 6 முதல் 11 வரை கல்வி கற்கும் மாண வர்களுக்கான கணிதபாட பயிற்சி நூல்களை வழங்கி மாணவர் களை ஊக்கப்படுத்தினார்.

(05)

# கிழக்கு பிராந்திய சாயி சேவா நிலைய மாணவர்களின் சிறுவர் தின வைபவம்

## கலை நிகழ்வுகள் களை கட்டின





கிழக்கு பிராந்திய சத்திய சாயி சேவா நிலையங்களின் பாலவிகாஸ் மாணவர்களின் சிறுவர் தின நிகழ்வு காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் முழுநேர வைபவமாக இடம்பெற்றது.

பிரார்த்தனைகள், பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கான விழிப்பூட்டல்கள், ஆக்க திறன் வெளிப்பாடுகள், கலை நிகழ்வுகள் ஆகியன களை கட்டின. குருமார்கள், தொண்டர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

காரைதீவு சத்திய சாயி சேவா நிலைய பாலவிகாஸ் மாணவிகளின் குழு நர்த்தன நிகழ்வு இடம்பெற்றது. (05)

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரானார் அருண் தம்பிமுத்து



தமிழர் விடுதலைக்கூட்டணியின் புதிய தலைவராக அருண் தம்பிமுத்து தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கட்சி யின் தலைவர் ஆனந்த சங்கரியின் தலைமையில் நேற்று முன் தினம் வவுனியாவில் கூடிய பொதுச் சபை கூட்டத்தில் அருண் தம்பிமுத்து தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக விளங்கிய காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி யின் அமைப்பாளராக இவர் செயற் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நிரந்தரத் தீர்வே அவசியம்

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் சிவராத்திரி பூசையை நடத்தவிடாமல் அதனைக் குழப்பி பொலிஸார் அடாவடித்தனம் செய்ததை எதிர்த்துக் கடந்த சில தினங் களாகத் வடக்கு கிழக்கில் ஏதோவோர் இடத்தில் தொடர்ந்து போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த விவகாரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஆலய நிர்வாகத்தினர் 8 பேரையும் உடன் விடுதலை செய்யும்படியும் சை மக்களின் வழிபாட்டுரிமையை மதிக்கும்படியும் வலியுறுத்தியே இந்தப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கைது செய்யப்பட்ட 8 பேரில் ஐவர், தம்மை விடுவிக்கும்படி வலியுறுத்தி வவுனியா சிறையில் பட்டினிப் போராட்டம் நடத்தினர். வெளியிலிருந்து அவர்களின் விடுதலைக்காகப் போராட்டம் நடத்துவார்கள் என்று உறுதிமொழி வழங்கப்பட்டு அந்தப் பட்டினிப் போராட்டம் –முடித்து வைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே அவர்களை விடுவிக்கக்கோரி ஆங்காங்கு போராட்டங்கள் நடக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்றும் போராட்டம் நடப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு மத்தியில் அவர்களின் விடுதலை தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து நேரில் பேச நேரம் கேட்டிருக்கிறார்கள். இன்று அந்தச் சந்திப்பு நடப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. அதற்கான நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கிடையில் இந்த விடயம் தொடர்பில் இந்து மா மன்றமும் அரசுத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது. அவர் தனது பணிக் குழாம் பிரதானியான சாகல ரத்நாயக்க ஊடாக இந்த விடயத்தைக் கையாள்கின்றார் என்றும் தெரிகின்றது.

அதாவது நிறைவேற்று அரசுத் தலைவர் என்கி வகையில் நீதிமன்றத்தில் உள்ள ஒரு வழக்கில் அரசியல் தலையீட்டை தமிழ்த் தலைவர்களும் கேட்கிறார்கள், பொது அமைப்புக்களும் கேட்கின்றன. இன்று வெடுக்குநாறிமலை ஆலய வழக்கு வவுனியா நீதிமன்றத்திற்கு வரும்போது கைது செய்யப்பட்டவர்களின் சார்பில் பிணை கேட்கப்படும்போது, அரசுத்தலைவரின் உத்தரவு அல்லது அறிவுறுத்தலின் பேரில் காவல்துறையினரின் தரப்பிலிருந்து அதற்கு எதிரப்போ ஆட்சேபனையோ தெரிவிக்கப்படாமல் இருக்கலாம். அதன் மூலம் அந்த 8 பேரும் தற்காலிகமாக வெளியில் விடப்படுவர். வழக்குத் தொடர்ந்து நடக்கும்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஆலய நிர்வாகிகள் பிணையில் வெளிவருவது என்பது ஒரு தற்காலிக நிவாரணம் மட்டுமே. பிரச்சினைக்கான தீர்வல்ல. அப்படியிருக்கும்போது நீதிமன்ற நடவடிக்கையில் உள்ள ஒரு பிரச்சினையில் தற்காலிகத் தீர்வைநாடி அரசியல் தலையீட்டைத் தமிழ்த் தரப்புக்கள் கேட்பது நியாயமான நடவடிக்கையாகத் தெரியவில்லை. வெடுக்குநாறிமலைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண அவர்கள் அரசுத் தலைவரைச் சந்தித்தால் அதிலொரு நியாயம் உண்டு. ஆனால் ஆலய நிர்வாகிகளைப் பிணையில் எடுப்பதற்கு அரசுத் தலைவரைச் சந்திப்பது சரியானதல்ல.

அப்படிச் செய்வதன் மூலம் வெடுக்குநாறிமலைப் பிரச்சினையின் உண்மையான பரிமாணம் மழுங்கடிக்கப்படும். அதற்கான நிரந்தரத் தீர்வு எட்டப்படாமலேயே போய்விடும். முல்லைத்தீவு குருந்தூர்மலையிலும் ஏற்கனவே இதுதான் நடந்தது. அங்கும் பிரச்சினைகள் கிளம்பியபோது அதற்கான தற்காலிகத் தீர்வுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். பிரச்சினையை குறித்து ஆராய குழு நியமிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கடைசியில் எந்தக் குழுவும் நியமிக்கப்படவும் இல்லை. பிரச்சினைக்குத் தீர்வும் காணப்படவில்லை. அதே நிலமையே வெடுக்குநாறிமலை விவகாரத்திலும் ஏற்படக்கூடும்.

அதனால் இந்தப் பிரச்சினையில் மட்டுமன்றி இதுபோன்ற அனைத்துப் பிரச்சினைகளிலும் நிரந்தரத் தீர்வு நோக்கியதாகவே தமிழ்த் தரப்பினரின் அரசியல் நகர்வுகள் அமையவேண்டும். தற்காலிக நிவாரணங்களை நோக்கியதாக அல்ல.

# கற்பகதரு என்னும் அற்புதம்

## கள்ளும் பனையும்

அங்கம் –33



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பனையில் இருக்கும் பாளையினைச் சீவியே பூத்துணர்ச்சாறு எடுக்கப்படுகிறது. அதுதான் பின்னர் கள்ளாயும் மாறுகிறது என்றும் பார்த்தோம்.பூந்துணர்ச்சாற்றினைத் தருகின்ற நிலையில் ஆண்பனைகளைவிடப் பெண் பனை களே அதிகளவில் தருகின்றன என்பது நோக்கத்தக்கதாகும்,ஆண்பனையானது ஏழுமாதம் தொடக்கம் எட்டுமாதங்கள் வரைக்குமே சாற்றினைத் தந்து நிற்கும்.ஆனால் பெண்பனையானது ஏழு மாதம் தொடக்கம் ஒன்பது மாதம் வரை தந்து நிற்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.ஆண் பனைகளைவிடப் பெண்பனைகளே அதிகமாகச் சுரக் கின்றன என்பது முக்கியமாகும்.ஆண்பனைகளில் கள்ளெடுக்க்கும் முறையும் , பெண்பனைக ளில் கள்ளெடுக்கும் முறை வேறு வேறுவிதமாகவே காணப்படுகிறது.

பெண்பனையில் பாளைவரும் நிலையில் – அப்பாளை இளம் பாளையாக இருக்கும் பொழுது அதனைச்சீவி கள்ளெடுக்கப்படுகிறது. இப்பருவத்தில் கள்ளெடுக்கும் முறையை ' தட்டுப்பனை முறை ' என்றுஅழைக்கிறார்கள்.பெண்பனையின்பாளைகள் முதிர்ந்த நிலையில் அதனிலிருந்து கள் எடுக்கும் முறையை ' காய்வெட்டிப் பனை முறை ' என்றும் அழைக்கிறார்கள். ஆண் பனையில் இளம்பாளைப் பருவத்தில் கள்ளெடுக்கிறார்கள். அதற்கு ' அரிபனை முறை ' என்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆண் பனையில். முதிர்ந்த பாளைகளிலிருந்து கள் பெறப்படும் முறைக்கு ' வழுப் பனை முறை ' என்று பெயர் வைத்திருக்கிறார்கள் என்பதும் நோக்கத் தக்கதா கும்.இவையனை த்தும் கள்ளோடும் , பத







நீரோடும் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பப் பெயர்கள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கி றது,

கள் குடிப்பது சரியா தவறா என்னும் நிலை சமூகத்தில் எழுச்சி பெற்றிருக்கிறது என்பதையும் கருத்திருத்தவேண்டும்,அதேவேளை கள்ளிறக்குதல் என்பது தொழிலாகவும் , வருமானத்தைக் கொடுப்பதாகவும் அமைந்தும் இருக்கிறது.

கள்ளினைப் பற்றி பழந்தமிழ் இலக்கியங்களே சொல்லுகின்றன. கள்ளுக்கடை மறியல், கள்ளுக்க டைப் போராட் டம் என்றெல்லாம் நடைபெற் றிருப்பதையும் அறிய முடிகிறது. கள்ளானது மருத்துவ குணம்மிக்கது என்றும், கள் ளினை அளவுடன் குடிப்பதால் தீங்கு பெரிதும் இல்லை என்றும் கருத்துக்கள் பரவலாக இருப்பதும் நோக்கத் தக்க தாகும்.கள்ளினை விரும்பிக் குடித்துக் கொண்டே ஒரு மன்னன் சங்ககாலத்தில் இருந்தானாம், அவன் கள்ளினை விற்றவர்களுக்கு உரிய பொருளைக் கொடுக்காமல் கடன்காரனாக இருந்தானாம் என்றும் சங்க இலக்கிய வாயி லாக அறிய முடிகிறது. ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் கள்ளினை விரும்பிக் குடித்தார்கள் என்றும் இலக் கியக்கியங்கள் இயம்பி நிற்கின்றன.

அதேவேளை தமிழரின் மருத்துவமாகிய சித்த மருத்துவம் கள்ளை மருத்துவ குணம் மிக்கது என்று காட்டுவதும் நோக்கத்தக்கதாகும்.

*விந்துதீர மூறுமதீ வெப்புடனே தாகம்வோம்*
*பந்தமாங் தாதுவுமே பாரிக்கும் – உந்துபித்தந்*
*தோன்றும்பாடாணங்கள் சுத்தியுமாங் தோகைமின்னே*
*என்ற பனைமதுவிற் கே*

அகத்தியர் குணபாடத்தில் கள் பற்றி இப்படிக்கூறப்பட்டிருக்கிறது. இதில் கள்ளானது – உடலுக்கு வலிமையினைக் கொடுக்கிறது. ஆண்மையை உண்டாக்குகிறது. நீர் வேட்கையினைப்போக்குகிறது.அதுமட்டுமல்லாமல் மருந்துகள் செய்வதற்குப் பயன்படுத்தும் பாஷாணங்களையுதூய்மைசெய்யவும்பயன்பட்டு நிற்கிறது என்றும் சொல்லப்ப ட்டிருக்கிறது என்பதும் நோக்கத்தக்கதாகும்.

கள்ளைப்பற்றி எங்கள் ஈழநாட்டுப் புலவரான

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# கற்பகதரு என்னும் அற்புதம் கள்ளும் பனையும்



4 ம் பக்கதொடர்ச்சி...

நவாலியூர் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவரும் பாடியிருக்கிறார்.

*ஏழைகட்குஞ்செல்வருக்கும்போற்றபனைமரத்திற்*
*பாளைவருங் காற்பருவம் பார்த்ததனை – தாழ*
*திடுக்கித் தடிகொண் டிடுக்கிப் பிடியால்*
*அடித்து நுனியை யரிந்து – மடக்கியே*
*முட்டிவாய் வைத்து முடிந்துவிடின் மெல்லவே*
*மட்டுலாங் கள்ளூறி வந்திருக்கும் – இட்டமுடன்*
*வாமமதத் தாரதனை வாமிக்கு வைத்துண்டு*
*காமியம் வேண்டிக் களிப்பார்கள் – ஏமமிகு*
*கள்ளைக் குடித்து களியாடல் நல்லறிஞர்*
*எள்ளி விடுத்த விழிதொழிலாம் – உள்ளநிலை*
*போக்குங்கள் ளுண்ணிற் பொருந்து முடல் வலிமை*
*நீக்குஞ்சிரங்குமுத நோர்பிணிகள் – ஆக்குகின்ற*
*ஏரா முறைமை யியம்புகிறேன் நீயதனை*
*நேராகக் கேட்டிடுவாய் நேரிழையே – சேரும்*
*அரபொடியூ சிக்காந்த மாங்கீச்சுக் கிட்டம்*
*உரமுடனே முட்டியிட் டூற – மருவுநிலை*
*எழுமுடன் சென்றா லிறக்கியதி காலையுண்ண*
*ஈழைகா மாலையிவை யேகுங்காண் – பாளைதனிற்*

கள்ளிறக்குதல் தொழிலில் பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். கள்ளிறக்கும்தொழிலில் உள்ளவர்களில் சிலர் கள் ளினை இறக்கி விற்றுக் காசு எடுப்பதில் முக்கிய கவனத்தைச் செலுத்துகிறார்கள் என்றும் , கள்ளினை அவர்கள் விரும்பிக் குடிக்காது இருக்கிறார்கள் என்றும் அறிந்திட முடிகிறது. கள்ளுக்குடித்தால் அதனால்தீமைவருமாஅல்லதுவராதாஎன்றும் விவாதிக்கும் நிலையிலில்லாமல் அவர்கள் கள்ளினைக் குடிக்காமல் இருக்கிறார்கள் என்பதும் நோக்கத்தக்கது. அதே நேரம் கள்ளினைப் படித்தவர்களும் குடிக்கிறார்கள். பெரிய பதவிகளில், உயர் அந்தஸ்த்தில் இருப்பவர்களும் குடிக்கிறார்கள். சிலர் தெரியக் குடிக்கிறார்கள். சிலர் இரகசிகசிமாய்க் குடிக்கி றார்கள். கள் என்றால் ஒரு ஆசை எல்லோரிடமும் குடி கொண்டே இருக்கிறது. அந்த ஆசையானது அன்று தொடக் கமே ஆரம்பமானது என்பதும் நோக்கத்தக்கதாகும்.

கள்ளினை மரத்திலிருந்து இறக்கியவுடன் குடிப்பதற்கென்றே செல்லுபவர்களும் இருக்கிறார்கள். அதே வேளை கள்ளினை விற்பதற்கென்று அமைக்கப்பட்ட கள்ளுக் கொட்டில்களை நாடிப் போவோரும் பலர் இருக்கிறார்கள். கள்ளுத் தவறணை என்னும் பெயரிலும் கள் விற்கும் இடங்களும் அமைந்து காணப்படுகின்றன. மற்றைய குடிவ கைகள் போல் நாகரிமுடைய குடிவகையாக கள் இருக்கவில்லை. அதனால் கள் விற்கும் இடங்கள் சாதாரண இடங்களாக நாகரிக நிலை புகா இடங்களாகவே அமைந்திருக்கின்றன என்பதும் நோக்கத் தக்கதாகும். கள்ளைக் குடிப் பதற்குப் பயன்படுத்தும் பாத்திரங்களே பெரும்பாலும் பனை ஓலையினால் அமைந்ததாகவே இருக்கிறது. பச்சை ஓலையினால் ஆக்கப்படும் அதனைப் ‘பிளா‘ என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். பனைக்குக் கீழமர்ந்து பனை ஓலையினால் செய்யப்பட்ட பிளாவைக் கையில் ஏந்தி கள்ளினை வாங்கிக் குடிப்பதில் பலரும் ஆனந்தம் அடைகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். மற்றையகுடி வகைகளைக் குடிப்பதற்கென்று விதம்விதமான கண்ணாடிக் குடுவைகள் வந்திருக்கின்றன. அவற்றில் குடிப்பதையே நவநாகரிகம் என்று பலரும் நினைக்கிறார்கள். அதுதான் அந்தக் குடிவகைகளுக்கான விசேடம் என்னும் நிலையும் அமைந்து விட்டது. ஆனால் கள் என்பது கிராமியத்தின் அடை யாளமாக இருப்பதால் அதில் நவநாகரிகம் நுழைய முடியாமல் ஆகி விட்டது என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா ! கள்ளினைப் போத்தல்களில் அடைத்து விற்பனைக்கும் விடுகின்ற நிலையினையும் தற்போது காணக் கூடியதாகவும் இருக்கிறது.

கள்ளுக் குடிப்பது என்பது நீண்டகாலமாக இருந்து வருகிறது என்ற போதிலும் – கள்ளானது கேட்டினை விளை விக்கக் கூடியது என்னும் கருத்தும் முகிழ்த்து வந்திருக்கிறது என்பதும் கருத்திருத்த வேண்டிய விடய மேயா கும். கள்ளினைக் குடிப்பவர்களை சமுதாயத்தில் ஒருவிதமாக நோக்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். கள் குடிப்ப வர்களுடன் உறவினையே வைத்துக் கொள்ளுவதை விரும்பா நிலையும் சமூகத்தில் காணப்படுகிறது. கள்ளுக் கொட்டில் என்றாலே அருவருப்பாக எண்ணுபவர்களையும் காண முடிகிறது. கள்ளினை வியந்து கூறிய பழந்தமிழ் இலக்கியங்கியங்களின் கருத்துக்களையெல்லாம் புறந்தள்ளிவிட்டு அதற்கு எதிராக மாற்றுக் கருத்துக்களை மிகவும் ஆணிதரமாக எடுத்துரைக்க எழுந்தது பழந்தமிழ் இலக்கியம். அது என்ன வென்று அறிந்திட ஆவலெழுகிற தல்லா ? அதுதான் பொய்யா மொழி எனப் போற்றப்படும் ‘ திருக்குறளாகும்‘. கள்ளுக்கு எதிராகப் போர்க்கொடி ஏந்திய முதற் போராளியாக வள்ளுவரை எடுத்துக் கொள்ளலாம். எப்படியெல்லாம் வாழக்கூடாது என்று சொல்லுவ தோடு அமையாமல் ‘ இப்படித்தான் வாழ வேண்டும் ‘ என்று சொல்லி அதற்கான வழி வகைகளையும் மிகவும் சிறப்பாகவே வள்ளுவர் திருக்குறள் வாயிலாக வழங்கி இருக்கிறார். திருக்குறளில் ‘ கள்ளுண்ணாமை‘ என்று ஒரு அதிகாரத்தையே வைத்து கள் பற்றிய கருத்துக்களை வள்ளுவர் வழங்கி இருக்கிறார்.

*இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்*
*திருநீக்கப் பட்டார் தொடர்பு*

விலைமகளே ஒதுக்கப்பட வேண்டியவள். அவளுடன் கள்ளினை ஒப்பிடுகிறார் வள்ளுவர். விளைமகளையும் , கள் ளினையும் நாடுபவர்கள் திருமகளாலேயே ஒதுக்கப்படுவார்கள் என்று சுட்டிக்காட்டுவதும் நோக்கத்தக்கது.

*உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்*
*கட்காதல் கொண்டொழுகு வார்*

கள்ளினை விடாது எப்போதுமே அதில் மிகுந்தவிரும்பம் உடையவர்களாக இருந்தால் - அவரைக் கண்டு எவருமே பயப்படவே மாட்டார்களாம். அதுமட்டுமன்றி தமக்கிருக்கும் புகழையுமே இழந்து விடுவார்களாம்.

*உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்*
*எண்ணப் படவேண்டா தார்*
*ஈன்றாள் முகத்தாயும் இன்னாதால் என்மற்றுச்*
*சான்றோர் முகத்துக் களி*

கள்ளைனைக் குடிப்பாரைச் சான்றோர்கள் மதிக்கவே மாட்டார்கள். பெற்றெடுத்த தாயின் முகத்திலும் துன்பத்தை ஏற்படுத்திவிடுவாம்.

*நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்*
*பேணாப் பெருங்கூற்றத் தார்க்கு*

நாணம் என்னும் நற்பண்பே நிற்காமல் ஓடிவிடுமாம். நாணமில்லாவிட்டால் அவன் மனிதனேஇல்லைஎன்றாகிவிடுமல்லவாஎன்று வள்ளுவர் இடித்துரைக்கின்றார். இப்படியே கள்ளின்தீமையினைவள்ளுவர்எடுத்துரைத்து கள்ளுக்குடிப்பதனை வன்மையாகவே கண்டிக்கின்றார்.

மகாத்மா காந்தி கள்ளினை எதிர்த்தார். சக்கரவர்த்தி இராஜகோபாலாச் சாரியார் எதிர்த்தார். பூதானச் செம்மல் வினோபாஜி எதிர்த்தார். பல தலைவர்களும் கள்ளினை எதிர்த்தார்கள். கள்ளினைக்குடித்தால் மதியானது மயங் குகிறது. கள்ளுக்குடித்தவன் என்ன செய்கிறோம் என்பதை அறியா நிலையில் பல தவறுகளையே செய்தும் விடு கிறான். அளவுக்குமிஞ்சிக்கள்ளினைக்குடித்தவர்களால் குடும்பத்தின் ஒற்றுமையே சீர்குலைந்து போயிருக்கி றது. குடிகாரக் குடும்பம் என்னும் அவப்பெயர்கூட சமூகத்தில் வந்திருக்கிறது. இதனால் கள் குடிப்பதை விட வேண்டும். கள் குடிப்பது என்பது அறத்துக்குப் புறம்பானது என்னும் கருத்தானது சமூகத்தில் வலுப் பெற்றிருக்கிறது. அப்படிவலுப்பெற்றகருத்தானது ஈழத்துச் சிந்தனைக் கவிஞரால் எப்படிக் கவிதையாக வந்திருக்கிறது பாருங்கள்.

*கள்ளுக்கடைப் பக்கம் போகாதே*
*காலைப்பிடித்துக் கெஞ்சுகிறேன்*
*கண்ணும் புகைந்திடும் நெஞ்சும் வரண்டிடும்*
*கைகால் உலர்ந்திடும் இந்த கள்ளாலே*

*ஆச்சி எந்தன் அப்புவும் இந்தக் கடையில் தான்*
*அடுத்தவீட்டு வாத்தியாரும் கடையில்தான்*
*விட்டமின் பீஎண்டு வைத்தியரும் சொன்னதாலே*
*விட்டேனோ கள்ளுக்குடியை நான்*

*பாவிப் பயலே கொஞ்சம் கேளடா*
*பாலூட்டி வளர்த்த நானுன் தாயடா*
*பற்றி எரியுதெந்தன் வயிறடா*
*பனங்கள்ளை மறந்து நீயும் வாழடா*



*கடவுள் தந்த பனைமரங்கள் தானடா*
*கடவுள் கள்ளைத் தொட்டதுண்டோ கேளடா*
*வாய்க்கொழுப்பும் மனத்திமிரும் வளர்ந்துவரும்*
*உனக்குநானும்வாலறுக்கும்நாளும்வருமோ*

*கள்ளுக்குடி உன் குடியைக் கெடுத்திடும்*
*கடன்காரனாக உன்னை மாற்றிடும்*
*கண்டகண்ட பழக்கமெல்லாம் பழக்கிடும்*
*கடைசியில் கட்டையிலே கொண்டு போய்ச் சேர்த்திடும்*

*கடவுளே என் மகனும் இதனை உணரானோ*
*கள்ளுக்குடியை விட்டொழிந்து திருந்தானோ*
*அன்னை சொல்லு கேட்பானென்றால்*
*ஆறறிவு படைத்த அவனும் பேரறிஞன் ஆகிடுவானே*

**வளரும் .....**

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகம் உதவி!

## சத்திர சிகிச்சைக்குரிய இயந்திரக் கொள்வனவுக்கு



சர்வதேச லயன்ஸ் கழகம் 2021 - 2022 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் லயன் ஆர்.எல்.ராஜ்குமாரால் தனது ஆளுநர் பதவிக்காலத்தில் மிகப்பெரிய சேவைத்திட்டத்தை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மேற்கொள்ளவேண்டும் என்ற பெருவிருப்போடு, சர்வதேச லயன்ஸ் கழக எல்.சி.ஐ.எவ். நிதியத்தில் இருந்து ஒரு கோடியே 40 லட்சம் ரூபாவைப் பெற்று, அவரது பாரியார் லயன் மேரியன் அவர்களின் முயற்சியால் உள்ளூரில் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு, நன்கொடைகள் ஊடாகச் சேகரித்த 52 லட்சம் ரூபாவையும் சேர்த்து ஒரு கோடியே 92 லட்சம் ரூபாவில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு ஒவ்வொரு படுக்கைகளுக்கும் ஒட்சிசன் வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா செலவில் 'ஒட்சிசன் பிளான்ற்' உருவாக்கப்பட்டு 2022 - 2023 ஆளுநரின் காலத்தில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

கடந்த 8 ஆம் திகதி தற்போதைய ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம்.பீற்றரால், சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி வாகீசன் லயன்ஸ் கழகத்திடம் விடுத்த வேண்டுகைக்கு அமைவாக மீதமுள்ள 42 லட்சம் ரூபாவுக்கு இரு முக்கிய கருவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வின்போது வைத்திய நிபுணர் அவர்களின் நெறிப்படுத்தலில் வைத்திய உத்தியோகத்தர் ஒருவரால் 'அல்ராசொனிக் பொக்கற் ரொப்லர்' என்ற கருவியின் தேவைப்பாடு தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கருவி, விபத்தில் ஒருவர் காயமடைந்தால் அவரது உடலில் இரத்த நாளங்களின் செற்பாடுகளைக் கண்டறிவதும், இரத்தக் கட்டி, அல்லது இரத்த ஓட்டத்தில் தடங்கல்கள் ஏற்பட்டால் அதனைக் கண்டறியும் கருவியாகும்.

இந்த வேண்டுகைக்கு உடனேயே முதற் பெண் லயன் சாவித்திரியின் மேற்பார்வையில் தற்போதைய ஆண்டு இயங்குகின்ற லயன் பெண்கள் அணித் தலைவி லயன் சானிகா பீரிஸ் அவர்கள் லயன் பெண்கள் அணி ஊடாக அந்தக் கருவியை வழங்குவதற்கு உதவுவதாக உறுதியளித்தார். உடனேயே அந்த இடத்திலே யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழக உறுப்பினரும் லயன் பெண்கள் அணியின் பிரதிச் செயலாளருமான லயன் மயூரிகா ரஜீவன் தனது தனிப்பட்ட நிதியில் 50 ஆயிரம் ரூபாவை வழங்குவதாக உறுதியளித்தார். ஞாயிற்றுக்கிழமை அவரது கழகத்துக்கு ஆளுநரின் உத்தியோகபூர்வ விஜயம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் வைத்து லயன் மயூரிகா ரஜீவனால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஊடாக ஆளுநரிடம் வழங்கப்பட்டது.

(05)

# பக்கத்து வீட்டில் தண்ணீர் குடித்துவிட்டு சென்ற பெண் கீழே விழுந்து உயிரிழப்பு

## வட்டுக்கோட்டை தொல்புரத்தில் சம்பவம்

நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக் கிழமை) மாலை, அயல் வீட்டில் தண்ணீர் வாங்கி குடித்துவிட்டு படலைக்கு வெளியே வந்த குடும்பப் பெண்ணொருவர் கீழே மயங்கி விழுந்துள்ளார். இந்நிலையில் அவரை தூக்கிக்கொண்டு அவரது வீட்டுக்கு சென்றவேளை வீட்டின் வாசலில் அவர் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை - தொல்புரம் கிழக்கு, சுழிபுரம், சிவபூமியடி பகுதியைச் சேர்ந்த இராசேந்திரம் செல்வநிதி (வயது 49) என்ற குடும்பப்பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த பெண் அவரது அயல் வீட்டுக்காரருடன் பேசுவதில்லை. இந்நிலையில் நேற்று அவரது வீட்டில் இருந்து சுமார் 30 மீற்றர்கள் தூரத்தில் உள்ள அயல்வீட்டுக்கு சென்று தண்ணீர் தருமாறு கேட்டு வாங்கி குடித்துவிட்டு தனது வீட்டுக்கு செல்வதற்கு வெளியே வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் வீதியில் மயங்கி விழுந்துள்ளார். உடனே அங்கிருந்தவர்கள் அவரை தூக்கி அவரது வீட்டுக்கு கொண்டு செல்லும்போது குறித்த பெண் உயிரிழந்துள்ளார். இது குறித்து உயிரிழந்த பெண்ணின் கணவன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு, கணவர் அவரை தாக்குவதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் தாயார் வழமையாக பாவிக்கும் மாத்திரைகளை விழுங்கிவிட்டு அயல்வீட்டுக்கு சென்றதாக அவரது மகள் தெரிவிக்கின்றார்.

இது கொலையா அல்லது இயற்கை மரணமா என்ற விவரங்கள் வெளியாகவில்லை. வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது (05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்திலுக்கு பௌத்த மதகுருமார்களால் பாராட்டு





மல்வத்து மகாவிஹார அனுநாயக்க மற்றும் யக்கல விக்கிரமாரச்சி ஆயுர்வேத பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் வணக்கத்துக்குரிய நியங்கொட தர்மகீர்த்தி ஸ்ரீ சங்கரக்கித விஜிதஸ்ரீ தேரரின் கௌரவிப்பு மற்றும்சன்னஸ்பத்ரவிருதுவழங்கும்நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை அம்பாறை,அரந்தலாவ சர்வதேச பௌத்த கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் வீரசிங்க உட்பட 150 பௌத்த மதகுருமார்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தலைமை மதகுரு, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மூவின மக்களையும் மதித்து செயற்படக் கூடியவர் எனவும், கடந்த காலங்களை விட தற்போது கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களுக்கும் ஒரே விதமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது எனவும், ஆளுநரின் ஒவ்வொருசெயற்பாடுகளும்நல்லிணக்கத்தை ஏற்படுத்த கூடிய வகையில் இருப்பதாகவும், மூவின மக்கள் மத்தியிலும் ஆளுநருக்கு அதிக மரியாதை காணப்படுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் கருத்து தெரிவித்தார். (05)

# வெடுக்குநாறிச் சம்பவம் கண்டிக்கத்தக்க ஒன்றே

## அகத்தியார் அடிகளார் காட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்)

வெடுக்குநாறி மலையில் இடம்பெற்றபுனிதமானசிவராத்திரி நாளில் இடம்பெற்ற சம்பவம் அடக்குமுறையானது இதனை பொலிஸார் மேற்கொண்டமை கண்டிக்கத்தக்கதுஎனஅகத்தியார் அடிகளார்தென்கயிலை ஆதினம் தெரிவித்தார்.

திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும்தெரிவிக்கையில்-

நாங்கள் வழிபாட்டில் ஈடுபடும் போது இவ்வாறான விடயங்களை மேற்கொள்வது நல்லதல்ல .இந்த நாட்டிற்கு ஒரு சமுதாயத்திற்கு பல்லின சமூகம் வாழும் இந்த நாட்டில் இது ஏற்றதல்ல .இறைவனை வழிபடும் போது அடக்குமுறையான நிகழ்வு சைவத்திற்கு மட்டுமல்ல முழு சமூகத்திற்கும் ஏற்க முடியாது.(05)



# 735 மதன மோதக பக்கற்றுகளுடன் ஒருவர் காத்தான்குடியில் கைது

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரையின்கீழ் யுக்தியபோதையொழிப்புதிட்டத்தின்கீழ் காத்தான்குடிபொலிஸார்மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 735 மதன மோதக பக்கற்றுகளுடன் 35 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக்காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி.கஜநாயக்க தெரிவித்தார்.

வாகனமொன்றில் குறித்த போதை மாத்திரைகள் எடுத்து வரப்பட்ட போதே கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

காத்தான்குடி டெலிகொம் வீதியில் ஞாயிற்றுக்கிழமை காலை புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதானநபரிடமிருந்து735மதன மோதக பக்கற்றுகள் மீட்கப்பட்டுள்ளதுடன் வாகனமும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்தநபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த இரு நாள்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஐஸ் மற்றும் ஹெரோயின், கேரளா கஞ்சாவுடன் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)



## அரசியல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்கட்சிகள்மீதானநம்பிக்கை இராணுவம்மற்றும்நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையைவிடக் குறைவாகவே உள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

2011 இல் 63 வீதமான மக்கள் நாடாளுமன்றத்தை நம்பினார்கள் 2022 இல் இது 24 வீதமாக காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ளது ஆய்வு.

2011 இல் அரசியல் கட்சிகளின் மீதான நம்பிக்கை 56 சதவீதமாகக் காணப்பட்டது 2024இல் அது 19 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது எனத் தெரிவித்துள்ள மாற்றுக் கொள்கைகளிற்கானநிலையம்இந்த முடிவுகள்இலங்கையின்ஜனநாயகம் எதிர்கொண்டுள்ள மிகப்பெரிய சவால்களை வெளிப்படுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளது.

## பதவியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரண்பட்டால், அவற்றுக்கு திருத்தங்களையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிக்க உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. முன்மொழியப்பட்டபரிந்துரைகளை மூன்று வாரங்களுக்குள் ஜனாதிபதி மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கு தெரிவிக்கவேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை ஆளும் தரப்புக் கண்டிப்பாக ஏற்க வேண்டும். சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலை (ஒன்லைன்) பாதுகாப்புச் சட்டத்தால்ஜனநாயகம்அப்பட்டமாக அழிக்கப்பட்டுள்ளது. இன்றைய ஆட்சியாளர்கள் உச்ச நீதிமன்ற உத்தரவுகளைக்கூட உதைத்து சட்டத்தின் ஆட்சியை அழிக்கக் கதவுகளைத் திறந்து விட்டுள்ளனர்.

ஒரு சபாநாயகர் கட்சி சார்பற்றவர். ஆனால் தற்போதைய சபாநாயகர் பக்கச்சார்பாகவே திட்டத்தைச் செயல்படுத்துகிறார். இதுவரை பதவியில் இருந்த 25 சபாநாயகர்களில் பலவீனமானவர் தற்போதைய சபாநாயகர்தான். அவர் ஆட்சியாளர்களின் நீட்சியாக மாறியுள்ளார்.

தற்போதுள்ள ஆளும்தரப்பு சர்வாதிகாரஆட்சிக்குவழிவகுக்கிறது. அத்தகைய சூழலில் மக்களின் அடிப்படைஉரிமைகளைபெற்றுத்தர சபாநாயகர் முன்னோடியாக மாற வேண்டும்..

ஜூலை நடுப்பகுதிக்குள் ஜனாதிபதி தேர்தலை அறிவிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம்உள்ளது. ஜனாதிபதித்தேர்தலை ஒத்திவைக்க சட்டத்தில் இடமில்லை, அதாவது, மற்றத் தேர்தல்களைப் போல அல்லாமல், அது நெகிழ்வுத்தன்மையற்ற ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நடத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொண்டாலும்கூட, ஜனாதிபதித் தேர்தலை ஒருபோதும் ஒத்திவைக்க முடியாது. இது குறிப்பிட்ட திகதிகளில் நடத்தப்பட வேண்டும்.

## ரூ. 100 மில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இந்நிதி ஊடாக ஏற்றுமதி, சுற்றுலா, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உற்பத்தித்துறைகளில்சிறிய மற்றும் மத்திய தரக் கைத்தொழில்களுக்கு ஆதரவு வழங்குவதற்கு மற்றும் எதிர்நோக்கும் சவால்களுக்கு ஈடுகொடுக்கும் தன்மையை அதிகரிப்பதற்காக அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களை மேலும் வலுப்படுத்துவதற்காகஇவ்வுதவியைப் பயன்படுத்தலாம்என்றும்இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்ட முயற்சியாளர்களுக்கு இக்கடன் நிதியிலிருந்து மூலதனஉதவிகளைவழங்கமுடியும். அத்துடன் நாட்டின் 52% ஆக தல தேசிய உற்பத்தியைப்பேணுவதுடன்இ சிறியமற்றும்நடுத்தரக்கைத்தொழில் முயற்சிகளின் ஊடாக 42% ஆன தொழில் வாய்ப்பை ஏற்படுத்தலாம் என்றும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க சுட்டிக்காட்டினார்.



# 'மரகதம்' வரலாற்று நூல் வெளியீட்டு நிகழ்வு





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் 'மரகதம்' வரலாற்று நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபையின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தொகுத்து எழுதிய இந் நூல் வெளியீட்டு விழா ஆலய சந்நிதானத்தில் ஆலயத் தலைவர் கலாநிதி கி. ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.

ஆன்மீக அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து சிறப்பித்தார்.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம் கலந்து சிறப்பித்தார்.

ஆசியுரையை ஆலய பிரதம குரு ஸ்ரீசண்முகமகேஸ்வரக் குருக்கள் வழங்கினார். வெளியீட்டுரையை நூலாசிரியர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார்.

முதல் பிரதியை ஆலய தலைவர் கி.ஜெயசிறில் சுவாமி நீலமாதவானந்தா ஜீக்கு வழங்கி வைத்தார். ஏனைய பிரதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன.

நூலுக்கு அனுசரணை வழங்கிய லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த ரி.விஜயலதா, ரி.விஜயகரன் சார்பில் அவரது சகோதரர் சி.பிரேமச்சந்திரன் சிறப்பு பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வின் சிறப்பம்சமாக வெளியீடு விழா அடையாளமாக மீனாட்சி அம்மனின் அழகான பெறுமதியான திருவுருவப்படங்கள் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், கலாநிதி மூ.கோபாலரெத்தினம் மட்டக்களப்பு ஆசிரிய தம்பதியினர் சுகுணமதி அருள்ராஜா, முதலைக்குடா ஆசிரியை திருமதி நளினி அகிலேஸ்வரன், அதிபர்களான பி.தயாநிதி ( வீரமுனை), செ.சிவயோகராஜா(காரைதீவு) ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அதேவேளை, 550 வருடகால வரலாற்று பாரம்பரியத்துடன் கூடிய மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கான முதல் வரலாற்று நூலான 'மரகதம்' நூல் வெளியீட்டு விழாவிற்கு முன்னதாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் கலந்துசிறப்பித்தனர்.

அவ்வமயம், சகல அடியார்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஆலய செயலாளர் த.சண்முகநாதன் நன்றிகள் தெரிவித்தார்.(05)

# புத்தளம் நபுராவிற்கு சிறீ விக்ரமகீர்த்தி விருது சமூகசேவைக்கு கிடைத்த உயரிள கௌரவம்





இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியத்தின் ' மலையகம் 200 ' எனும் தொனிப் பொருளில் சாதனையாளர் விருது வழங்கும் விழா கண்டி கெப்பட்டிபொல மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவர் தேசபந்து எம் தீபன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் புத்தளத்தைச் சேர்ந்த எம்.டி.எப் நபுரா சியாஜிற்கு சமூகசேவை செயற்பாட்டிற்கான சாதனையாளர் விருதாக 'சிறீ விக்ரமகீர்த்தி ' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார் .

இந்நிகழ்வில் சான்றிதழ், பதக்கம் மற்றும் சால்வை அணிவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இவ்விருது வழங்கல் விழாவின் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவும் கௌரவ அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் டி. செந்தில்வேலவர் ஆகியோருடன் இன்னும் விசேட அதிதிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புத்தளம் நகரில் சுமார் 06 வருடங்களுக்கு மேலாக சமூக சேவை பணியில் புத்தளம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 'திரிய பெண்கள் அமைப்பை 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பித்து தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு மேல் அமைப்பின் தலைவியாக இருந்து சங்க உறுப்பினர்களுக்கும் சமூகத்திற்கும் பலவிதமான சேவைகளை செய்துள்ளதுடன் 2019 ஆம் ஆண்டு முதல் ' சைனிங் ஸ்டார்' சிறுவர்கழகத்தை உருவாக்கி 'பிரண்ட்ஸ்' நிறுவத்தின் அனுசரணையுடன் இணைப்பாளராக செயற்பட்டு சிறுவர்களுக்கான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் புத்தளம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவின் சிவில் பாதுகாப்பு அமைப்பின் உபதலைவராக சேவையாற்றுவதுடன் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை புத்தளத்தில் உள்ள 'மாற்றத்தை உருவாக்கும் மன்றம்' என்ற அமைப்பின் நிர்வாக உறுப்பினராகவும் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை புத்தளம் பிரதேச செயலகத்தின் ஆயுர்வேத சங்கத்தின் உறுப்பினராகவும் இருந்து வரும் இவர் பல்வேறு பட்ட ரீதியில் சமூக சேவை பணிகளையும் புத்தளத்தில் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் விருது வழங்கும் விழாவில் நாடு முழுவதிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 150 விற்பன்னர்கள் சிறீ விக்ரமகீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (05)

# அறநெறிப் பாடசாலைகளுக்கு புதிய பாடத் திட்டம் அறிமுகம்



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையில் உள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் புதிய பாடத் திட்டமொன்றை அறிமுகம் செய்திருக்கிறது.

அதன் ஓரங்கமாக திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் மற்றும் மாணவர்களை இணைத்துக்கொள்வது தொடர்பான கருத்தரங்கு நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.



பிரதேசசெயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நிஷாந்தினியின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி வளவாளராகக் கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்தினார்.

இதில் திருக்கோவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தனர்.

இதன் போது, புதிய பாடத் திட்டத்திற்கான பாட நூல்களும், பஞ்சாங்கமும் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு பிரதேச செயலாளரால் வழங்கி வைக்கப்பட்டது.

கலந்துகொண்ட அனைவருக்கும் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலப் பணிப்பாளர் கண.இராஜரெத்தினத்தின் ஏற்பாட்டில் இலங்கை சிவதொண்டர் பேரவை முழுமையாக உணவுசிற்றுண்டிகளை வழங் கியது. இலங்கை சிவதொண்டர் பேரவை ஸ்தாபகர் நவா இளங்கோ இதற்கான அனுசரணை வழங்கியிருந்தார்கள்.(05)



# இந்திய கேரள பஞ்சாயத்து முறையை பின்பற்றினால் சமத்துவம் பேணப்படும்

## சர்வதேச மகளிர் உரிமை ஆர்வலர் லோகேஸ்வரி தெரிவிப்பு



(வி.ரி. சகாதேவராஜா)

பெண்கள் அரசியல், சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி போன்றவற்றில் சமத்துவமாக செயற்படுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். அதற்கு இந்தியாவில் கேரளா மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் பஞ்சாயத்து முறையை பின்பற்ற வேண்டும்.




இவ்வாறு பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் செயலாளரும் மனித அபிவிருத்திதாபன நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமாகிய திருமதி எஸ். லோகேஸ்வரி தெரிவித்தார்.

மனித அபிவிருத்தி தாபனமும் பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியும் இணைந்து கல்முனை இஸ்லாமாபாத் பொது கட்டடத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வை கடந்த ஞாயிற்றுக்கிமை நடத்தியது.



வேள்வி பெண்கள் அமைப்பின் உபதலைவியான எம். றிலீபா பேகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பெண்கள் ஒத்துழைப்பு முன்னணியின் செயலாளரும் மனித அபிவிருத்தி தாபன நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளருமாகிய திருமதி சிவப்பிரகாசம் லோகேஷ்வரி கலந்துசிறப்பித்தார்.

இந்த நிகழ்விக்கு மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ.றியால், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தார்கள், அரசியல் செயற்பாட்டாளார்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் அமைப்புகளின், இளைஞ்ஞர் அமைப்புகள் ஆகியவெற்றின் முக்கியஸ்தார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# செட்டிகுளத்தில் வீதியால் சென்றவரை யானை தாக்கியதில் பரிதாப மரணம்

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வீதியால் சென்றவரை யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார். என செட்டிகுளம் பொலிஸார் நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்தனர்.

செட்டிகுளம், மருதமடுப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை வீதியால் பயணித்த முதியவர் ஒருவரை அப் பகுதிக்கு வந்த யானை தாக்கியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த குறித்த முதியவர் வவுனியாவைத்தியசாலைக்குகொண்டுசெல்லப்பட்டு சேர்க்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

செட்டிகுளம், மருதமடுப் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய தனபாலகே அனுர தென்னக்கோன் என்பவரே மரணமடைந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர். (05-100)

# யாழில் பெண்ணொருர் கிணற்றில் விழுந்து சாவு

யாழ்பாணபொலிஸ்பிரிவிற்குட்பட்ட நாவலர் வீதி பகுதியில் வீட்டில் தனியாக வசித்து வந்த பெண் ஒருவர் நேற்று கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த பெண் நாவலர் வீதியைச் சேர்ந்த 65 வயதுடையவராவார்.

உயிரிழந்த பெண்ணிக் சடலம் கிணற்றிலி'ருந்து எடுக்கப்பட்டு யாழ்.வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (05)

# கோலாகலமாக நிகழ்ந்தேறிய பசுமை அமைதி விருது விழா




தமிழ்த்தேசியப்பசுமைஇயக்கத்தின்பசுமைஅமைதி விருதுகள் விழா ஞாயிற்றுக்கிழமை கோலாகலமாக நிகழ்ந்தேறியுள்ளது. மாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும்; சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச்; சூழல்பாதுகாப்புச் செயற்பாடுகளில்பங்கேற்பாளர்;களாக்கும்நோக்குடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டு தோறும் பசுமை அமைதி விருதுகளை வழங்கி வருகிறது.

2023 ஆம் ஆண்டுக்கான விருதுகளை வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்;

இடம்பெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற



இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த விழாவில் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் முதல் 200 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்குச் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகள் வழங்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த கனிமொழி கணேசானந்தன் தங்கப்பதக்கம் வழங்கியும், இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆனந்தஜோதி அபிஷாகர், மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியைச் சேர்ந்த சுதர்சன் வியாசகன் ஆகிய இருவரும் வெள்ளிப்பதக்கங்கள் வழங்கியும், மூன்றாம் இடத்தைப்பெற்ற ஓட்டமாவடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த முஹம்மட் முஸ்தபா மஹார் அஹமத் வெண்கலப் பதக்கம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுவரும் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான விருதை இம்முறை கொழும்பைச் சேர்ந்த செல்லப்பா கிருபானந்தமூர்த்தி பெற்றிருந்தார். இவருக்கு விருதோடு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது மேலும், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் சிறந்த செய்கையாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் மாணாக்க உழவர்களாகவும் தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் அதிக எண்ணிக்கையான தாவரங்களை அடையாளம் கண்டவர்கள் தாவராவதானிகளாகவும்; சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

புலம்பெயர் தமிழர் கூட்டமைப்பின் அனுசரணையுடன் நடைபெற்ற இவ் விருதுகள் வழங்கும் விழா அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இலங்கையில் வழங்கப்பட்டுவரும் சூழல்சார் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை




அமைதி விருதுகள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்த முன்னிலை விருதுகளில்ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.(05)

# உலர் உணவுப் பொருள்கள் ஓசிடிஅமைப்பால்வழங்கல்



(தில்சாத் பர்வீஸ்)

ஓசிடிஅமைப்பின்தலைவர் அஸ்மி யாசினின் ஏற்பாட்டில் சம்மாந்துறையில் தெரிவுசெய்யப்பட்ட சில மஹல்லாக்களில் உள்ள மஹல்லவாசிகளுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு ஓசிடி அமைப்பின் செயலாளர் டீசுசுரோஸ்தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்விற்குபிரதம அதிதியாக சம்மாந் துறை ஏரிஜ கணக்காளர் ஜிப்ரி கலந்து கொண்டு உலர் உணவுப் பொதிகளை பள்ளிவாசல் களின் தலைவர்களிடம் கையளித்தார்.



மற்றும் இந்த நிகழ்விற்கு ஓசிடி அமைப்பின்அமைப்பாளர் ஆசிக் அவர்களோடு ஓசிடி அமைப்பின் நிர்வாக செயலாளர் பெரோஸ் மற்றும் ஓசிடி அமைப்பின் ஆலோசகர்களும் பள்ளிவாசல்நிர்வாகிகளும் கலந்து சிறப்பித்தனர்.(05)

# வட்டகச்சியில் யானைகளின் தொல்லை அதிகரிப்பு

வட்டக்கச்சி கட்சன் வீதி பண்ணைபகுதியில் அமைந்துள்ள விவசாய பண்ணையின் பின்புறம் மற்றும் அயல் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை தினமும் அதிகரித்து வருவதாகவும் மக்கள் குற்றச்சாட்டு அந்தவகையில் சனிக்கிரைத இரவும் வட்டக்கச்சி விவசாய பண்ணைக்கு அருகில் தென்னை செய்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரின் 20 இற்கும் மேற்பட்ட தென்னையை முற்று முழுதாக அளித்த துவசம் செய்து உள்ளதாகவும் இப்பகுதிகளைதொடர்ச்சியாக யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை ஆறு மணி அளவில் பன்னாங்கண்டி வட்டக்கச்சிபண்ணைக்கும்இடைப்பட்ட காட்டுப் பகுதியில் வீதி ஓரமாக யானை ஒன்று நிற்பதை அப்பகுமக்கள் அவதானித்ததா கூறினர்.

எனவே இந்தப் பகுதி ஊடாக பயணிக்கும் பொதுமக்கள் அதிகாலை மற்றும் இரவு வேலைகளில் மிகுந்த அச்சத்துடன் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள்தெரிவித்துள்ளனர்.

(05-113)

# கற்பிட்டி நஷீர் பவுண்டேஷனின் இப்தார் நிகழ்வு கோலாகலம்

(சியாஜ்)



கற்பிட்டி நஷீர் பவுண்டேஷனின் நிர்வாகக் குழுவின் இப்தார் நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி அமைப்பின் தலைவரும் அதிபருமான ஏ.எம் றஸ்ஸாக் தலைமையில் கற்பிட்டி ஹமாஸாவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கற்பிட்டிநஷீர்பவுண்டேஷனின் இணைப்பாளர் ஏ.ஆர்.எம் அஸ்ஹர் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிலதிபர், சமூகஆர்வலர்கள்மற்றும் ஊடகவியலாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் இந்த இப்தார் நிகழ்வில் முக்கிய அம்சமாக 'இலங்கையின் தற்கால அரசியல் சூழ்நிலையும் கற்பிட்டியின் எதிர்காலமும்' என்ற தலைப்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.(05)

# கிணற்றில் தவறி விழுந்து இளம் யுவதி பரிதாப சாவு

## வவுனியாவில் சம்பவம்



வவுனியா, சமனங்குளம் பகுதியில் தோட்டகிணற்றில்தவறிவிழுந்து இளம் யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார் என சிதம்பரபுரம் பொலிஸார் நேற்று (திங்கட்கிழமை) தெரிவித்தனர்.

வவுனியா, சமனங்குளம் பகுதியில் வசித்து வரும் இளம் யுவதி ஒருவர் ஞாயிற்றுக்கிழமை மாலை கிணற்று மோட்டரை பேட்ட போது அதன் குழாய் கழன்றமையால் அதனை பூட்ட முயற்சித்த போது கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளார்.

தொடர்ந்து மோட்டர் இயங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த அயல் வீட்டார் கிணற்றடிக்கு சென்று பார்த்த போது குறித்த இளம் யுவதி கிணற்றில் விழுந்து இருந்ததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடனன் யுவதியை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் மரணமடைந்து விட்டார் என வைத்தியர்கள் தெர்வித்துள்ளனர்.

சம்பவத்தில் வவுனியா, சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய தவரூபன் லக்சிகா என்ற யுவதியே மரணமடைந்தவராவார். சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(05-100)

காலைக்கதிர் Kalaikkathir

# மேல் மாகாண சுகாதாரப் பணியாளரின் இடமாற்றங்கள் தற்காலிகமாக நிறுத்தம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கோரிக்கைக்கு அமைவாக



மேல் மாகாணத்தில் வருடாந்த சுகாதார இடமாற்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க வேண்டுகோளுக்கு இணங்க, மேல்மாகாண ஆளுநர் எயர்வைஸ் மார்ஷல் ரொஷான் குணதிலக்க இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

மேல்மாகாணத்தில் வருடாந்த இடமாற்றங்கள் முறைசாரா முறையில் நடைபெறுகின்றன எனக் குற்றஞ்சாட்டி மேல்மாகாண வைத்தியசாலை ஊழியர்கள் நேற்று(திங்கட்கிழமை) நகர அபிவிருத்தி அமைச்சின் பொது மக்கள் தினத்திற்கு வந்து தமது முறைப்பாடுகளை முன்வைத்தனர். மேல் மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 300 வைத்தியசாலை ஊழியர்கள் அமைச்சரைச் சந்திக்க வந்தனர்.

முறைசாரா முறையில் இந்த வருடாந்த இடமாற்றங்கள் இடம்பெற்றன என அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். அப்போது மேல்மாகாண ஆளுநர் எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் குணதிலக்கவை தொலைபேசியில் அழைத்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களுடன் மேல்மாகாண ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்று ஆளுநரை சந்தித்தார்.

இதன்போது உண்மைகளை விளக்கிய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், இந்த வருடாந்த இடமாற்றங்களை மேற்கொள்வதில் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன எனத் தெரிவித்தார். சில சுகாதார தொழிற்சங்கங்கள் ஊழியர்களின் கோரிக்கைகளைப் புறக்கணித்து வருவதாகக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஊழியர்கள் தெரிவித்தனர். நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி சுகாதார சேவையை சீர்குலைத்து அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதற்கு சில சுகாதார சங்கங்கள் செயற்படுகின்றன என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அங்கு தெரிவித்தார்.

பெரும்பான்மையான சுகாதார ஊழியர்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு இந்த இடமாற்றங்களைத் தற்காலிகமாக ரத்து செய்து முறைப்படி நடைமுறைப்படுத்துமாறு ஆளுநரிடம் அமைச்சர் கேட்டுக் கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர், இந்த இடமாற்றங்களை தற்காலிகமாக இரத்து செய்து வருடாந்த இடமாற்றங்களை எவ்வித பிரச்சினையும் இன்றி சுகாதார ஊழியர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து நடைமுறைப்படுத்துமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார்.

அதன் பின்னர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மேல்மாகாண சபையின் தரைத்தளத்தில் உள்ள சுகாதார ஊழியர்களிடம் வந்து சில சுகாதார சங்கங்கள் சுகாதார சேவையை சீர்குலைக்க சதி செய்வதால் குறிப்பிட்ட சில சுகாதார சங்கங்கள் மீது வீழ்ந்து விட வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார். ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக அரசாங்கத்தை சங்கடப்படுத்தவே அவர்கள் விரும்புகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(05)









# வவுனியா பூவரசங்குளத்தில் பஸ் மோதியதில் ஒருவர் சாவு

## சாரதி கைது



வவுனியா, பூவரசங்குளத்தில் பஸ்ஸில் ஏற முற்பட்டவரை பஸ் மோதியதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பூவரசங்குளம் சந்தியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் நேற்று(திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது -

வவுனியாவிலிருந்து தலைமன்னார் நோக்கி பயணித்த தனியார் பஸ்ஈ பஸ் தரிப்பிடத்தில் தரித்து நின்ற சமயத்தில் பஸ்ஸில் ஏறுவதற்காக வீதியின் குறுக்காக பஸ்ஸின் முன்பக்கமாக வந்த முதியவரொருவர் பஸ்ஸில் ஏற முற்பட்ட சமயத்தில் பஸ்ஸை சாரதி செலுத்தியமையால் சிக்குண்டு முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் பூவரசங்குளம், மணியர்குளம் பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய சிவக்கொழுந்து வள்ளிப்பிள்ளை என்பவரே உயிரிழந்தவராவர். சம்பவ இடத்திற்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தமையுடன், பஸ்ஸின் சாரதியையும் கைது செய்தனர். மேலும் உயிரிழந்தவரின் சடலம் பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் பஸ்ஸை பூவரசங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர்.

(05-100 )

# 20 பவுண் தங்க நகைகளை திட்டமிட்டு களவாடி குற்றச்சாட்டில் 3 பேர் கைது



(பாறுக் ஷிஹான்)

பல லட்சம் ரூபா பெறுமதியான 20 பவுண் நகைகளை திட்டமிட்டு களவாடிய 3 சந்தேக நபர்களை சவளக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட 5ஆம்கொலனி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு வீடு ஒன்றின் ஜன்னல் உடைக்கப்பட்டு உள் நுழைந்தவர்களால் சுமார் 39 லட்சத்துக்கும் அதிகமான 20 பவுண் நகைகள் களவாடப்பட்டுள்ளன என முறைப்பாடு 15 ஆம் திகதி மறுநாள் வெள்ளிக்கிழமை கிடைக்கப்பெற்ற நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது களவு இடம்பெற்ற வீட்டின் உரிமையாளர்கள் நோன்பு இரவு நேர வணக்க வழிபாட்டிற்காக பள்ளிவாசலுக்கு சென்ற சமயம் பார்த்து 3 சந்தேக நபர்கள் இந்தச் செயலை மேற்கொண்டதுடன் சுமார் 20 பவுண் நகைகளை குறித்த வீட்டின் ஜன்னலை உடைத்து எடுத்து சென்றிருந்தனர்.

இந்நிலையில் உடனடியாக செயற்பட்ட சவளக்கடை பொலிஸார் இத்திருட்டில் ஈடுபட்ட சாளம்பைக்கேணியை சேர்ந்த 33, 26 ,28, வயது மதிக்கத்தக்க சந்தேக நபர்களை கைது செய்ததுடன் சந்தேக நபர்கள் வசம் இருந்து களவாடி செல்லப்பட்ட 20 பவுண் நகைகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இந்நடவடிக்கையில் சவளக்கடை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம்.எம். அஸ்ரப் வழிகாட்டலில் பெருங்குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான எஸ்.ரவீந்திரராசா, உப பொலிஸ் பரிசோதகர் ஐயூப்கான், பொலிஸ் சார்ஜன்டுகளான அன்சார், ஜெசில், சம்பத், பொலிஸ் உத்தியோகத்தர்களான திசாநாயக்க, சாந்தன் ஆகியோர் ஈடுபட்டிருந்ததுடன் சந்தேக நபர்களை கல்முனை நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.(05)

# போரால் பாதிக்கப்பட்டோருக்கு சுன்னாகம் லயன்ஸ் உதவிகள்





யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அவயவங்களை இழந்த இரு குடும்பங்களுக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் வாழ்வார உதவித்திட்டமாக தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நேற்று (திங்கட்கிழமை) வழங்கப்பட்டது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களாக இருந்து அமரத்துவமடைந்த லயன் மகாதேவா-லயன் பூமாதேவி ஞாபகார்த்தமாக அவர்களின் புதல்வன் லண்டனில் வதியும் ஆளுநர் சபையின் பிரதம இணைப்பாளர் லயன் ம.பிரிதுவிராஜாவின் நிதிப் பங்களிப்பில் இந்த சேவைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளரும் ஆளுநர் சபையின் ஆலோசகருமாகிய லயன் சி.ஹரிகரன், பிராந்தியத் தலைவர் லயன் பா.மரியதாஸ் ஆகியோர் கலந்து நிதியை வழங்கி வைத்தனர்.(05)

# JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட் JRIDE
## TAXI APP FROM JAFFNA
### இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே! உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!

இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

jride

JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

**விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?**

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 706563213 / 703563213**

## JRIDE TAXI APP
## SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

+94 703 563213
www.jride.lk

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2024இல் வெளியிடப்பெற்றது